# மாணவச் சமுதாயம் நலம்பெற நாம் தொடர்ந்து பயணிப்போம்!

# மாணவர்களுக்கு என்ன வேண்டும் என்பதை பார்த்துப் பார்த்து செதுக்கி இருக்கிறார் முதல்வர்!

## பள்ளிக் கல்வித் துறையின் முப்பெரும் விழாவில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி புகழுரை!

**சென்னை, செப். 21–**

**சென்னை, நேரு உள் விளையாட்டரங்கில், பள்ளிக் கல்வித் துறையின் சார்பில் நேற்று (20.09.2025), நடைபெற்ற முப்பெரும் விழாவில், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆற்றிய வரவேற்புரை வருமாறு:**

“உணர்வ துடையார்முன் சொல்லல் வளர்வதன்
பாத்தியுள் நீர்சொரிந் தற்று”

– என்கிற வள்ளுவருடைய வாக்கிற்கு, ‘உணர்ந்து கொள்ளக்கூடிய ஆற்றல் உள்ளவர்களின் முன்னிலையில் பேசுதல், வளரக்கூடிய பயிர் உள்ள பாத்தியில் நீர் பாய்ச்சுவது போல பயன் விளைவிக்கும்’ என்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் விளக்க உரையோடு, நம்முடைய தமிழ்நாட்டின் முதலமைச்சருடைய அறிவுறுத்தலின்படியும் வழிகாட்டுதலின்படியும், குறிப்பாக மனித நேயத்தையும் சமூக நீதியையும் உயர்த்திப் பிடித்த தந்தை பெரியாரின் மறு உருவமாக நாமெல்லாம் நெகிழ்கின்ற அளவிற்கு. நம்முடைய கண்கள் எல்லாம் கலங்குகின்ற அளவிற்கான ‘அன்புக்கரங்கள்’ என்ற திட்டத்திலிருந்து நாமெல்லாம் கர்வம் கொள்கின்ற அளவிற்கு அயல்நாட்டு கல்வித் திட்டம் வரைக்கும் தொடர்ந்து இது போன்ற திட்டங்களை முன்னெடுத்துக் கொண்டிருக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களே...

**மாணவர்களின் அறிவு மழுங்காமல் கூர்த்தீட்டும் முதல்வர்!**

“என்னை வகுத்தால் என்னுடைய தம்பிகள்; என்னுடைய தம்பிகளைக் கூட்டினால் நான்” என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னது போன்று,‘என்னை வகுத்தால் மாணவச் செல்வங்கள்; என்னுடைய மாணவச் செல்வங்களை கூட்டினால் நான்’ என்ற உணர்வோடு இன்றைக்கு பல் வேறு திட்டங்களை மாணவர்கள் நலன் சார்ந்த திட்டங்களைத் தீட்டிக் கொண்டிருக்கும் திராவிட மாடல் முதலமைச்சர் அவர்களே...

“கல்வி மட்டுமே சமத்துவம் வளரச் செய்யும் மிகப்பெரிய ஆயுதம்” என்று சொன்ன முத்தமிழறிஞர்,அந்த அறிவாயுதத்தின் முனை மழுங்காமல் அதை கூர் தீட்டிக் கொண்டிருக்கும் எங்களுடைய தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களே...

கல்வியும் சுகாதாரமும் என்னுடைய இரு கண்கள் என்று வெறும் சொல்லால் மட்டுமல்லாமல், அதை செயலாலும் இது போன்ற திட்டங்கள் மூலமாகவும் இன்றைக்கு செயல்படுத்திக் கொண்டிருக்கும் தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களை நம்முடைய அனைவரின் கரவொலியின் மூலமாக வருக வருக என்று வரவேற்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

‘முப்பெரும் விழா’ என்று சொல்லித்தான் அழைப்பை நாங்கள் வழங்கினோம்.கிட்டத்தட்ட 277 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய கட்டடங்களுக்கான அடிக்கல் நாட்டு விழா 94 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட கட்டடங்களை திறக்கின்ற விழா இந்த 2,715 பட்டதாரி ஆசிரியர்களுக்கு நுழைவு நிலைக்கான பயிற்சியை தொடங்கி வைக்கும் விழா என்று. இந்த விழாவை நாங்கள் செய்திருக்கிறோம்.

**142 மாணவர்களுக்கு தலா ரூ.10 ஆயிரம் ஊக்கத்தொகை!**

தமிழ்நாட்டு முதலமைச்சர் பள்ளிக் கல்வித்துறை சார்ந்து ஒரு இலக்கை எங்களுக்கு வழங்குகிறார் என்று சொன்னால், அந்த இலக்கை தாண்டி நிரூபிக்கிறோம் என்பதற்கு இந்த நிகழ்ச்சியே ஒரு சாட்சியாக அமைந்திருக்கிறது. முப்பெரும் விழாவையே, ஐம்பெரும் விழாவாக... அது எப்படி ஐம்பெரும் விழா என்று சொன்னால், எங்களுடைய சாரண - சாரணிய இயக்கத்திற்கான தலைமை அலுவலகத்திற்கு அடிக்கல் நாட்டுவிழா தமிழ்நாடு முதலமைச்சர் இதயத்திற்கு மிகவும் நெருக்கமான தமிழ் பாடத்தில் நூற்றுக்கு நூறு பெற்றிருக்கும் எங்களுடைய மாணவச் செல்வங்கள், கடந்த ஆண்டு 48 மாணவர்களுக்கு இந்தாண்டு 142 மாணவர்களுக்குத் ஊக்கத்தொகையாக 10 ஆயிரம் ரூபாய் வழங்கும் விழா என்று. இதை ஒரு ஐம்பெரும் விழாவாக இன்றைக்கு நாங்கள்நடத்திக் கொண்டிருக்கிறோம்.

“இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்”

– என்பதுபோன்று, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அந்தக் காலத்தில் இந்த இளைஞர் அணியை யாரை நம்பி வழங்க வேண்டும் என்று நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சருக்கு வழங்கி, ஒரு இயக்கத்திற்கான



இளைஞர்கள் மட்டும் ஈர்த்து,இன்றைக்கு ஒரு முதலமைச்சராக ஒட்டு மொத்தமாக தமிழ்நாட்டில் இருக்கும் அனைத்து இளைய சமுதாயத்தையும் தன் பக்கம் ஈர்த்திருக்கிறார் என்று சொன்னால், அவர் கொண்டு வந்திருக்கும் திட்டங்கள் அதுபோன்ற திட்டங்கள்.

**9,024 வகுப்பறைகள் கட்டி திறந்து வைப்பு!**

திட்டங்கள் என்று சொல்லும்போது, இன்றைக்கு நாங்கள் பள்ளிக் கட்டடம் திறந்து வைத்திருக்கிறோமே... ஆட்சி மாற்றம் ஏற்பட்டதிலிருந்து இதுவரைக்கும் 9,024 வகுப்பறைகளை நாங்கள் கட்டி முடித்து திறந்து கொடுத்திருக்கிறோம். இன்னும் கட்ட வேண்டியது 8,000 இருக்கிறது. எங்களுடைய இலக்கு என்பது, கிட்டத்தட்ட 17,000. 2027 என்பது எங்களது இலக்குக்கான ஆண்டு. கண்டிப்பாக அதை நாங்கள் நிச்சயம் நிறைவேற்றுகின்ற வகையில், இன்றைக்கு இந்த 8,000 வகுப்பறைகளைகட்டிக் கொடுத்திருக்கிறோம். வெறும் வகுப்பறைகளை மட்டும்தான் சொல்லியிருக்கிறோம். மதில் சுவர்களை இந்தக் கணக்கில் நான் சொல்லவில்லை;கழிவறை வசதிகளை நான் சொல்லவில்லை;குடிநீர் வசதிகளை நான் சொல்லவில்லை; ஆய்வறைகள் பற்றி நான் சொல்லவில்லை.

இது எங்கே இருந்து வந்தது? 1996 இல் ஒரு சரித்திர நாயகன் முதலமைச்சராக முத்தமிழறிஞர் கலைஞர் உட்கார்ந்தபோது, அவருக்கான ஒரு ஏக்கம்- அவருக்கான மிகப் பெரிய ஒரு கனவு, நம்முடைய பிள்ளைகள் எல்லாம் கண்களில் அந்தக் கனவை சுமந்து கொண்டு தொலைதூரம் நடந்து சென்று படிக்கிறார்களே... அந்தக் கால்கள் வலிக்காதா...

**முத்தமிழறிஞர் கலைஞர் கனவை நிறைவேற்றுகிறோம்!**

எனவே, தொடக்கக் கல்வி என்றால், அது ஒரு கிலோமீட்டருக்குள் இருக்க வேண்டும்.நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி முறையே, மூன்று கிலோமீட்டர், ஐந்து கிலோமீட்டர்,ஏழுகிலோமீட்டருக்குள் இருக்க வேண்டும் என்றுநம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் விரும்பினார்.

அந்த 1996இல் தொடக்கக் கல்விக்கு மட்டும் கிட்டத்தட்ட ஏழாயிரம் வகுப்பறைகளை கட்டிக் கொடுத்திருக்கிறார் நம்முடைய கலைஞர் என்று சொல்லும்போது, அந்த ஐந்து வருடத்தில், வருடத்திற்கு 1,400 வகுப்பறைகள்; ஒரு நாளைக்கு நான்கு வகுப்பறைகள் கணக்கில் கட்டிக் கொடுத்திருக்கிறார்.

இன்றைக்கு நம்முடைய தமிழ்நாட்டின் முதலமைச்சர் 52 மாதத்தில் ஒரு நாளைக்கு கிட்டத்தட்ட ஆறு வகுப்பறைகள் கட்டித் தருவதாக கணக்காகப் பார்த்தால், 9,024 வகுப்பறைகளை கட்டி மாணவச் செல்வங்கள் பயன்பாட்டிற்கு நாங்கள் வழங்கி இருக்கிறோம்.

**வெறும் கட்டடங்கள் அல்ல - அறிவுத் தீபங்கள்!**

இது வெறும் கற்களால் கட்டக்கூடிய கட்டடங்களா நாங்கள் திறந்து வைப்பதெல்லாம்? இல்லை, பல லட்சம் முதல் தலைமுறை பட்டதாரிகளுக்காக நாங்கள் ஏற்றி வைக்கும் அறிவு தீபங்கள். அன்றைக்கு கலைஞர் அதை ஏற்றி வைத்தார். இன்றைக்கு அதை அணையாமல் பார்த்துக் கொண்டிருக்கிறார் நம்முடைய தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள்.

எங்களைப் பொறுத்தவரைக்கும்,இது வெறும் கட்டடங்கள் என்று சொல்வதைக் காட்டிலும், இது போன்ற கட்டடங்கள் மூலமாக சாதியையும் வறுமையையும் ஒழித்துக் கட்டக்கூடிய சமூகத்துக்கான கருவியை நாங்கள் கொடுக்கிறோம் என்றுதான் நான் எடுத்துச் சொல்வேன். எனவே, அப்படிப்பட்ட ஒரு நல்ல நிகழ்வில் இன்றைக்கு நாமெல்லாம் கலந்திருக்கிறோம்.

**13 வருடங்களுக்குப் பிறகு ஆசிரியர்கள் பணி நியமனம்!**

ஆட்சி மாற்றம் ஏற்பட்டதிலிருந்து, P.G. ஆசிரியர், ... ஆசிரியர்களை ஏறத்தாழ 13 வருடங்களுக்குப்பிறகு நாங்கள் பணிக்கு எடுத்திருக்கிறோம்.இது B.E.O.ஆக இருந்தாலும் சரி அல்லது எங்களைப் போன்ற ...,இதெல்லாம் சேர்ந்துப் பார்த்தால் இதுவரைக்கும் 8,388 பேரை நாங்கள் பணியில் எடுத்திருக்கிறோம்.

இந்த ஆண்டு எங்களுடைய திட்டம் மட்டும் பார்த்தீர்கள் என்றால்,எங்களுடைய P.G. ஆசிரியராக இருந்தாலும், B.T.ஆக இருந்தாலும், B.E.O.க்கள் எடுப்பதாக இருந்தாலும்,கிட்டத்தட்ட 3,227 பேர் நாங்கள் எடுக்கப்போகிறோம்.

எங்களைப் பொறுத்தவரைக்கும், ஒரு அரசாங்கம் என்பது கட்டமைப்பு. மாணவச் செல்வங்களுக்கு என்ன வேண்டும் என்பதை இன்றைக்குதமிழ்நாட்டு முதலமைச்சர் பார்த்துப் பார்த்து செதுக்கி இருக்கிறார்.

நினைத்துப் பாருங்கள்... 2,457 மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களை நாங்கள் எடுக்கும்போது தமிழ்நாட்டின் முதலமைச்சரால் எதிர்பாராத விதமாக வர முடியவில்லை. அவர் மருத்துவமனையில் அனுமதி பெற்றுவிட்டார். அதற்கான தேதிகளை நாங்கள் குறித்துவிட்டோம்.இப்போது இதை சார்ந்த என்ன செய்யலாம்? முதலமைச்சரிடம் உங்களது திருக்கரங்களால்தான் கொடுக்க வேண்டும். அதுதான் சரியாக இருக்கும் என்று சொன்னோம். நீங்கள் தேதியை குறித்து விட்டீர்கள். அந்த நாளுக்காக, அந்த ஆசிரியர் குடும்பமும், அதைச் சார்ந்திருக்கும் மாணவர்களும் காத்திருப்பார்கள். அது பொய்த்து விடக்கூடாது என்று சொன்னவுடன், நம்முடைய துணை முதலமைச்சரின் திருக்கரங்களால் இதே இடத்தில் நின்று2,457 பேருக்கும் பணி ஆணையை நாங்கள் வழங்கினோம்.

இன்றைக்கு ஏறத்தாழ 2,715 பேருக்குநீதிமன்றம் ஆணை வந்து உடனடியாக சேர்க்க வேண்டும் என்று ஒரு சூழ்நிலை வந்தபோது, முதலமைச்சருக்குத் தொடர்பு கொண்டோம். எங்கே இருந்தார்? ஜெர்மனி, லண்டனில் இருந்தார். கிட்டத்தட்ட15,500கோடி ரூபாய் முதலீடுகள்; ஏறத்தாழ 17,600 பேருக்கான வேலைவாய்ப்புகள் உருவாக்கும் விதமான மிகப்பெரிய அந்தப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது,அவர் சொன்னார்,“எனக்காக காத்துக் கொண்டிருக்க வேண்டாம். உடனடியாக அவர்களுக்கு கொடுங்கள். நீங்கள் கொடுப்பதைக்கூட ஆசிரியர் தினத்தன்றே அவர்களுக்கு கொடுத்து விடுங்கள். அவர்கள் சென்று சேரட்டும். அதற்குப் பிறகு அவர்களுடைய பயிற்சியை நான் தொடங்கி வைக்கிறேன்” என்று சொன்ன அடுத்த நிமிடம் நம்முடைய துணை முதலமைச்சர் அவர்களுடைய திருக்கரங்களால் ஆசிரியர் தினத்தன்றே உங்களுக்கான பணி ஆணையை நாங்கள் வழங்கி இருக்கிறோம்.

கொஞ்சம் நினைத்துப் பாருங்கள். அந்த2,457 பேருக்கு பணி ஆணையை வழங்க வர முடியாத சூழ்நிலையில் இருக்கும்போது, தமிழ்நாட்டின் முதலமைச்சர் மருத்துவமனையில் சும்மாவா இருந்தார். உடனடியாக அங்கே வீடியோ கான்ஃபரன்ஸ் மூலமாக பயனாளிகளிடம்பேசுவது; மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் பேசுவது; தலைமைச் செயலாளரைவரச் சொல்லி கோப்புகளில் கையெழுத்து போடுகிறார்; எங்களுடைய இயக்கம் சார்ந்திருக்கும் மண்டலப் பொறுப்பாளர்களை வரச் சொல்லி, இயக்கம் சார்ந்திருக்கும் பணியைச் செய்கிறார்.

**ஓரணியில் தமிழ்நாடு - விழிப்புணர்வுக் கூட்டம்!**

தமிழ்நாடும் இங்கிருக்கிற அரசாங்கமும் எங்களுடைய இயக்கமும் இயங்குவதற்கு என்னென்னவெல்லாம் செய்ய வேண்டுமோ அதை எல்லாம் அங்கிருந்து உட்கார்ந்து கொண்டே செய்து கொண்டிருந்தார். எங்களுடைய இயக்கத்தைச் சார்ந்த யாரும் நம்முடைய தமிழ்நாட்டின் முதலமைச்சர் மருத்துவமனையில் இருக்கிறார் என்று, நாங்கள் மண் சோறு சாப்பிடவில்லை; அலகு குத்திக் கொள்ளவில்லை; தீ மிதிக்கவில்லை. நம்பிக்கை ஒரு பக்கம் இருக்கலாம், இல்லாமல் போகலாம். ஆனால், அறிவு சார்ந்திருக்கும் எங்களுடைய தம்பிகளை என்ன செய்தார் தெரியுமா அவர்,‘ஓரணியில் தமிழ்நாடு’ என்று சேருங்கள். நான் சரியாகி வந்து விடுவேன் என்று, ஒவ்வொரு இயக்கத்தைச் சார்ந்த தோழர்களும் நடையாக நடந்து ஓரணியில் சேர்ந்தார்கள்.நாங்கள்கட்சிக்குஆட்களைசேர்க்கவில்லை. நாட்டின் நடப்பை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்று, அறிவு சார்ந்த கூட்டத்தை உருவாக்கி வைத்திருக்கிறார் நம்முடைய தமிழ்நாட்டு முதலமைச்சர் நான் சார்ந்திருக்கும் இயக்கத்தின் தலைவர் என்பதை நான் பெருமையோடு எடுத்துச் சொல்வேன்.

எனவே, அவ்வாறு வருகை தந்திருக்கும் நாம், நம்முடைய முழு குறிக்கோளும் நம்மை நம்பி ஒப்படைக்கும் பிள்ளைகள் மீது நாம் செலுத்திட வேண்டும்;பிள்ளைகளை நன்றாகப் படிக்க வைக்க வேண்டிய மிகப்பெரிய பொறுப்பு நம் ஒவ்வொருவருக்கும் இருக்கிறது.

“ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கில்
கையில் ஊமன் கண்ணில் காக்கும்
வெண்ணெய் உணங்கல் காக்கும்
பரந்தன்று இந்நோய்”

– என்று வெள்ளிவீதியார் குறுந்தொகையில் இருந்து ஒரு பாடல் பாடுகிறார்.

முத்தமிழறிஞர் கலைஞர் உடன்பிறப்புகளுக்கு அந்தக் கடிதத்தில் எழுதுகிறார் பாருங்கள். இந்தப் பாடலுக்கான அர்த்தம் என்பது ஒரு தலைவன் தலைவியை தேடுகிறார். தலைவி கிடைக்காமல் தலைவன் ஏங்குகிறார் என்பதுதான் பொருள்.ஆனால், முத்தமிழறிஞர் கலைஞர் உடன்பிறப்புகளுக்கு எழுதுவதில்நாட்டு நடப்பு எப்படி தெரியுமா இருக்கிறது...இதனுடைய அர்த்தம் என்பது, ஒரு சின்ன பானையில் மிகப்பெரிய வெண்ணை உருண்டையை வைக்கிறீர்கள்.வெயிலின் ஒளிபடும்போது அந்த உருண்டை உருகிவிடும். ஆனால், அந்த வெண்ணை உருண்டையை காக்கும் காவல்காரன் யார் என்று பார்த்தால், வாய் பேச முடியாதவன்; இருகைகளும் இல்லாதவன் என்று அவர் சொல்லியிருக்கிறார். எனவே, வெயிலில் உருகினால்அதை எடுத்துஅவனால் வைக்க முடியாது; அதை ஒரு பக்கம் எடுத்து வையுங்கள் என்று அவனால் சொல்ல முடியாது. இப்படிப்பட்ட ஒரு காவல்காரன் இருக்கிறான் என்றால், எப்படி அந்த நாட்டை காக்க முடியும். நாட்டு நடப்பை எப்படி கொண்டு வருகிறார் என்று சொன்னால், ஒரு வெண்ணையை வெயிலில் இருந்து காக்கக் கூடியவன் இரண்டு கைகளும் இல்லாமல் தன்னுடைய நாக்கும் இல்லாமல் இருந்தால் என்ன செய்வான்?

எனவே, இன்றைக்கு என்ன நடந்து கொண்டிருக்கிறது? ஏற்கனவே ஆண்ட சில கட்சிகள் எல்லாம் ஒன்றியத்தில் இருப்பவர்களோடு சேர்கிறார்கள். தங்களுடைய உரிமைக் குரலை இழந்து - தங்களுடைய நாக்குகளை இழந்து - அரணாக காக்க வேண்டிய கைகளை இழந்து இருக்கிறார்களே... நீங்கள் இந்த தமிழ்நாட்டிற்கு உபயோகப்பட மாட்டீர்கள் என்று ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களும் உணர்ந்திருக்கும் ஒரு தருணமாக நாம் இதை பார்க்கிறோம்.

என்ன அரசு விழாவில் அரசியலா என்று பார்க்காதீர்கள். அறிவு சார்ந்த மக்களிடம் அரசியல் சென்று சேர்ந்தால்தான், நாட்டு மக்களுக்கு ஒரு அரசன் என்ன செய்கிறான் என்பதை அறிவு சார்ந்த நம்மால் சொல்ல முடியும் என்பதற்காக நான் இதை சொல்கிறேன்.

எனவே, என்னைப் பொறுத்தவரைக்கும் வருகை தந்திருக்கும் பட்டதாரி ஆசிரியர்கள் இன்னும் ஆறு மாதங்களில் உங்களை நம்பி வரும் பிள்ளைகளுக்கான பொதுத்தேர்வுகள் வந்துவிடும். அந்த ஆறு மாதத்தில் உங்களுக்கு எப்படி பொதுத்தேர்வு வருகிறதோ, எங்களுக்கும் அந்த ஆறு மாதத்தில் பொதுத்தேர்தல் வந்துவிடும். நீங்களும் வெற்றி பெற வேண்டும்; நாங்களும் வெற்றி பெற வேண்டும். தொடர்ந்து நம்முடைய மாணவச் சமுதாயம் நலம் பெறுவதற்கு நாம் தொடர்ந்து பயணிப்போம் என்று சொல்லி, வருகை தந்திருக்கும் உங்கள் அனைவருக்கும் மீண்டும் ஒரு முறை என்னுடைய நன்றியையும் வாழ்த்துகளையும் தெரிவித்து இந்த அளவில்என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேசினார்.

---

## ‘ஆழ்கடலிலும் ஆராயப்படும் தமிழர் வரலாறு!’

# நம் பாரம்பரியத்தை உலகறியச் செய்யும் நமது முதல்வரின் ஈடுபாட்டிற்கு - இந்த ஆய்வுகள் சான்று!

## அமைச்சர் தங்கம் தென்னரசு பெருமிதம்!



சென்னை, செப். 21-

ஆழ்கடலிலும் ஆராயப்படு கிறது தமிழர் வரலாறு. நம் பாராம் பரியத்தை உலகறியச் செய்யும் நமது முதல்வர் அவர்களின் ஈடுபாட்டிற்கு இந்த ஆய்வுகள் ஒரு சான்று என்று அமைச்சர் தங்கம் தென்னரசு பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

அவரது வலைதளப் பதிவு வருமாறு: -

மூவேந்தர் காலத்திலும், சங்க இலக்கியத்திலும், சங்ககாலத்திற்கும் பின்னான காப்பியங்களிலும் சிறப்பித்துக் கூறப்படும் மிகப்பெரும் கடல் வாணிபத் துறைமுகமாக இருந்த காவிரிப்பூம்பட்டினம் என்றழைக்கப்பட்ட இன்றைய மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள "பூம்புகாரில்" , பழந்தமிழ் நாகரிகத்தின் தொன்மையை கண்டுணர்ந்து ஆராயும் பொருட்டு, இந்திய கடல்சார் பல்கலைக்கழகத்தின் உதவியுடன் தமிழ்நாடு தொல்லியல் துறை சார்பில், ஆய்வுப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. கடலுக்கு அடியில் ஆய்வுகள் மேற்கொள்ளும் இப்பணியினை பேராசிரியர் கே.ராஜன் தலைமை யில், தொல்லியல் துறை இணை இயக்குநர் சிவானந்தம் அவர்களை உள்ளடக்கிய வல்லுநர் குழு தொடங்கியுள்ளது.



பழந்தமிழர்களின் தொன்மையை வெளிக்கொணர்வதில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மேற்கொள்ளும் முயற்சிக்கும், நம் பாரம்பரியத்தை உலக றியச் செய்வதில் அவரது ஈடுபாட்டிற்கும், இந்த ஆய்வுகள் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இவ்வாறு அப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

---



## தி.மு.க. முப்பெரும் விழாவில்

# ‘மு.க.ஸ்டாலின் விருது’க்காக பெற்ற தொகையினை

## பொங்கலூர் நா.பழனிசாமி கழக வளர்ச்சி நிதிக்கு வழங்கினார்!

சென்னை, செப்.21-

கரூரில் நடைபெற்ற தி.மு.க. முப்பெரும் விழாவில், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முப்பெரும் விழா விருதுகள் வழங்கினார்.

ஏற்கனவே பெரியார் விருது பெற்ற துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி, எம்.பி., மற்றும் கலைஞர் விருது பெற்ற மூத்த முன்னோடிசோ.மா.ராமச்சந்திரன் ஆகியோர் விருதுக்காக, தங்களுக்கு கிடைத்த தொகையான தலா ரூபாய் மூன்று லட்சத்தினை கழக வளர்ச்சி நிதிக்கு விழா மேடையிலேயே வழங்கினர்.

அதனைத் தொடர்ந்து, தற்போது - ஒருங்கிணைந்த கோவை மாவட்ட முன்னாள் செயலாளர் - முன்னாள் அமைச்சர் பொங்கலூர் நா.பழனி சாமியும் தனக்கு வழங்கப்பட்ட மு.க.ஸ்டாலின் விருதுக்கான தொகை ரூபாய் மூன்று லட்சத்தை கழக வளர்ச்சி நிதிக்கென கழகத் தலைவர் அவர்களிடம் வழங்கினார்.




செங்கல்பட்டில் காஞ்சி வடக்கு மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் நடைபெற்ற “ஓரணியில் தமிழ்நாடு” தீர்மான ஏற்பு மாபெரும் பொதுக்கூட்டத்தில் கழகப் பொருளாளர் – கழக மக்களவை குழுத் தலைவர் டி.ஆர்.பாலு சிறப்புரையாற்றினார். அருகில் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், தீர்மானக் குழு செயலாளர் மீ.அ.வைதியலிங்கம், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஆர்.ராஜா, இ.கருணாநிதி, வரலட்சுமி மதுசூதனன், மாவட்ட நிர்வாகிகள் து.மூர்த்தி, வெ.விசுவநாதன், மாவட்ட ஊராட்சித் தலைவர் படப்பை ஆ. மனோகரன், செங்கல்பட்டு நகரச் செயலாளர் எஸ்.நரேந்திரன் ஆகியோர் உள்ளனர்.